உ

சிவமயம்



# சங்கானை வெல்வில்
# முருகையன் பராக்கிரமப் பதிகம்.

இயற்றியவர்:

ஸ்ரீமத் த. பொன்னையா உபாத்தியாயர்

ராஜா அச்சகம், சங்கானை.

உ

சிவமயம்

சங்கானை வெல்வில்

# முருகையன்

# பராக்கிரமப் பதிகம்.

இயற்றியவர்:

ஸ்ரீமத் த. பொன்னையா உபாத்தியாயர்

அச்சுப்பதிப்பு:

ராஜா அச்சகம், சங்கானை.

உ

குகமயம்

# முகவுரை.

முன்னொரு கற்பகாலத்திலே மாயை புத்திரனாகிய சூரபதுமன் என்னும் அவுணன் சிவபெருமானிடத்திலே அருந்தவஞ் செய்து அரிபிரமேந்திராதி தேவர்களாலும் மற்றவர்களாலும் அழித்தற்கரிய வச்சிர தேகத்தோடு ஆயிரத்தெட்டண்டங்களை நூற்றெட்டு யுகம் அரசாளும் வரத்தையும் பெற்று முடிசூடி அரசனாகித் தெய்வலோகத்திற்கு விசயஞ் செய்து ஆண்டுள்ள செல்வங்களெல்லாவற்றையும் கவர்ந்து அந்நகர்க்கும் எரியூட்டிச் சாம்பராக்கி ஆண்டிருந்து தேவர்களெல்லோரையும் பிடித்து நிகளம்பூட்டிக் கொடுஞ்சிறை செய்தும் காட்டிலுள்ள ஏனம், மரை, மான், இரலை முதலிய பல மிருகங்களையும் பிடித்துக் கொன்றுரித்த ஊனோடு பல்வகை மற்சங்களையுங் கொண்டுவந்து தரும்படி கொடிய கட்டளையிட்டுப் பெருந்தண்டனை செய்து வருவானாயினன்.

இக்கொடிய செயல்களைச் செய்தற்காற்றாத தேவர்கள் சிவபிரானிடஞ் சென்று முறையிட அவர் திருவுளமிரங்கி வேதக் காட்சியினாலும் உபநிடத்துச்சியின் விரிந்த போதக்காட்சியினாலும் காண்டற்கரிய தம்மிற் சிறிதும் பேதமுறாத ஒரே பரம்பொருளாகும் சிவசுப்பிரமணியப் பெருமானைத் திருவுளத்தில் நினைத்தலும் அவர் அச்சிவ பெருமானுடைய நெற்றிக் கண்ணினின்றும் ஆறு அக்கினிப் பொறிகளாகத் தோன்றி விரிபுவனமெங்கும் பரத்தலும் அதனைக்கண்டு தேவர்கள் பயந்தோடுதலும் சிவ பெருமானதனைத் திருநோக்கஞ் செய்து தேவர்களுக்கு அபயத்தங் கொடுத்து அத்தழற் பிழம்பைப் பொற்கரத்தால் எடுத்தமைத்து வாயுவைக் கொண்டேகுதி என்று கொடுப்ப அவனுமேற்றுச் சுமந்து செல்ல ஆற்றாது வருந்தி அக்கினியிடம் கொடுப்ப அவனுமேற்று அவ்

வாறே சுமந்தாற்றுது வருந்தி, பாகீரதியில் விட அவளும் சிறிதும் சுமக்கலாற்றாதவளாய்க் கொண்டு சென்று சரவண வாவியில் விட அங்கே மூதக்கார்க்கு மூதக்கவரும் ஆதிக் காதியாயுள்ளவரும் முடிவுக்கு முடிவாயுள்ளவரும் உயிர்க்குயிராய் உள்ளவருமாகிய பெருமானுர் கிடப்ப, இருப்ப, தவழ, எழும்ப, நிற்ப, நடப்பவாகிய ஆறு குழந்தைகளாகத் தோன்றிக் கார்த்திகை முலைப்பாலருந்தி அழுது விளையாடலைச் செய்திருத்தலும் அதனைச் சிவபெருமான் உமாதேவியாருக்குக் காட்ட அவரும் பேராசையோடு சென்று தமது திருக்கரங்களாலெடுத்து அணைத்தலும் ஆறுமுகம், பன்னிருகரம், பன்னிருகண், பன்னிரு செவி, இரண்டு திருத்தாள்களும் பொருந்திய அற்புதத் திருமேனியோடு புதியரிற் புதியனுய்த் தோன்றி அம்மையாரின் திருமுலைப் பாலுண்டும் அயனைச் சிறை செய்தும் சிவபெருமானுக்குக் குருவாகியும் தாரகனேடு கிரவுஞ்சத்தை வீட்டி திருச்செந்தூர் சென்று அங்கே வீற்றிருந்து வீரவாகுதேவரை மகேந்திரபுரிக்குச் சூரனிடத்துத்தூதாக அனுப்பி அவன் தேவர்களைச் சிறை விடுக்காமையால் அவன் புத்திரனுகிய பானுகோபன் முதலாம் புத்திரர்களோடு தம்பியாகிய சிங்கமுகன் முதலிய அவுணர்கள் எலோரையும் அழித்து சமுத்திரத்தின் நடுவில் மாவடிவமாக நின்ற சூரனை வேலால் இரு பிளவு செய்து மயிலும் சேவலுமாக்கி மகேந்திராபுரியை யழித்துத் தேவர் சிறை மீட்டுச் சொர்க்கலோகத்தைப் பழமைபோலாக்கித் தேவர்களைக் குடியேற்றி இன்பத்தோடு வாழ வைத்தருளினர்.

இவ்வாறு எம்மனேரையும் இரட்சிக்கத் திருவுளங் கொண்டு தமது திருக்கரத்திலிருந்த ஞானசத்தியாகிய வேற் படையின் திருவுருவை யெடுத்து சங்கானை வெல் விற் பதியிலுள்ள இருப்பைத்தாளிலே தோன்றி அதனை அப்பதிக்குரியவராகிய உயிரர் என்பவருக்குக் கனவில் அறிவிக்க அவர் பக்தி பரவசத்துடன் சென்று தரிசித்து அத்திருவேலை ஆண்டுள்ள விக்கினேசுரர் ஆலயத்தில் பிரதிட்டை செய்து 'இலுப்பைபத்தாள் முருகமூர்த்தி' யென்னுந திருநாமத்துடன் வழிபட்டுவந்தனர் அக்காலந்தொட்டு

அவர்தம் ஒன்பது சந்ததியினரும், தொடர்புடையவர்களும் சுமார் நானூறு வருடங்களாய்க் காலத்துக்குக் காலம் திருப்பணி முதலியவற்றைச் செய்து ஆலயத்தைச் சிறப்பித்து வந்து, இப்போ முப்பதாண்டுகள்வரை திருப்பணிகள் ஒருவாறு செய்துமுடித்து உட்சவங்கள் வருடந்தோறும் முறையே நடாத்தி வருகின்றனர்.

இத்தகைய எம்பெருமான்மேல், பதிகமும் ஊஞ்சலும் பாடித்தரவேண்டுமென்று திரு க. பொன்னையா, திரு அ. கந்தையா முதலியோர் பலமுறை கேட்டுக்கொண்டமையால் அறிவும், ஆயுளும் குறைய குறையாத பையுண் நோய் எண்ணில படைத்துப் பொய்யுடல் சுமக்கும் புன்மையேன் அப்பெருமானது அருட்டுணையாலிதனைப்பாடி முடித்தேனுதலின் நல்லார் என் குற்றம் நாடார்: நலந் தெரிந்து கொள்வார் என்பது எமது நம்பிக்கை.

சங்கானை

இங்ஙனம்

த. பொன்னையா



# சிறப்புப்பாயிரம்.

## 1

### நவாலியூர். திரு. க. சோமசுந்தரப்புலவர்

செல்வமலி யாழ்ப்பாண தேசந் தன்னில்
சிறந்திடுசங் கானைவளம் பதியில் மேவும்
மல்குவளஞ் செறிவெல்விற் றளியில் வாழும்
மயில்வாக னக்கடவுள் வடிவேற் பெம்மான்
மெல்குமர தனகமல சரணம் போற்றி
மேதகுநற் பதிகமிசை யூஞ்சற்பாவும்
அல்லலறுத் திடுசெங்கற் படையில் வந்த
ஆனைமுகன் மகதேவ பிள்ளை பேரில். 1

அன்புடனே யோதுபவர் வினைகள் தீர்க்கும்
அஞ்சொல்வளத் திருப்பதிக மணியா ரூஞ்சல்
இன்புடனே யாத்தமைத்தா னெழிற்சங் கானை
ஏறுபுகழ்த் தம்பர்மா மகிபன் மைந்தன்
நன்குபுனை சிவதொண்டன் அடியார்க் கன்பன்
நலஞ்சிறந்த வொழுக்கத்தான் நல்லோரேத்து
பொன்புனைந்த தமிழ்வல்லார் புகழும் வாய்மைப்[ம்
பொலிவுடையான் பொன்னையவேட் புலமை
யோனே. 2

## 2

### மயிலிட்டி தெற்கு,
### தமிழ்ப்பண்டிதர் திரு. இ. நமசிவாயம்

சங்கானை வெல்விலமர் முருக வேண்மேற்
றமிழ்ப்பதிக மூஞ்சலோடு தகவி னீந்தான்
சிங்கார மமைகவிதை செப்பு தீரன்
சிவசமய நெறியொழுகு சீலனார்க்குந்
தங்காத வதிநுட்ப மதியன் வாக்கி
தம்பர்தரு நற்றவச்சேய் சான்றோர் யாரும்
பொங்கார்வத் தொடுசிரமேற் போற்று மேலோன்
பொன்னைய நாமனுயர் புலவ ரேறே.

## 3

இழமண்டல சதகநூலாசிரியரும், ஆசிரிய திராவிட பண்டிதருமாகிய அர்சுவேலி திரு. வே. கணபதிப்பிள்ளை

இம்பர்மகிழ் வெல்வில்லி னிலுப்பைத் தாளில்
எழுந்தருளு மொருமுருக மூர்த்தி மீதில்
பம்புநவ ரசமடிக டோறுந் துள்ளப்
பராக்கிரம மூஞ்சலொடு பகர்ந்திட்டானல்
நம்பனருள் விரவுறுசங் கானை வாசன்
நாடுபுகழ் வேளாள வமிச நேசன்
தம்பர்மக னெனவுதித்த புண்யசீலன்
தாவில் பொன்னையனெனும் புலவன்றானே.

## 4

ஆவரங்கால் திரு. ச. சுப்பிரமணியம் ஆசிரியர்
(சோமாஸ்கந்த வித்தியாசாலை, புத்தூர்)

சொற்புகழ் கொண்ட வெல்விற் சுப்பிரமணியர் தம்மேல்
பொற்புறு பதிகமூஞ்சல் புனைந்தடி சூடத் தந்தான்
நெற்புடை சூழும் பண்ணை நீர்மைச் சங்கானைத் தம்பர்
அற்புத மைந்தன் பொன்னையாவெனு மறிஞரேறே. 1

குறுஞ்சிக் கிழவ னருள்கொள் குமர குருபரனைப்
பெறுஞ்சற் குருவெனப் பேணும் பொன்னைய பெருங்கவி
(ஞன்
உறுஞ்சொற் புலவர் தெவிட்டாது கற்க உரைத்த தமிழ்க்
குறுஞ்சொற் பொருட்சுவை யுண்டோ பிறர்கவி ஒன்றினு
(க்கே. 2

வட்டுர், திரு. ஆ. நல்லதம்பி ஆசிரியர்

சீரேறு சங்கானை வெல்வி லென்னுந்
திகழ்பதிகொ ளிலுப்பைத்தாள்முருகமூர்த்திப்
பேரேறு தெய்வம்மேற் பதிகமூஞ்சல்
பிறங்குதமிழ்ப் பாவினிக்கப்பேணித் தந்தான்
காரேறு குலதிலகன் கழறுமூர்வாழ்
கதித்த திருத் தம்பர்தரு காதன் மைந்தன்
பாரேறு சித்தாந்த சைவ பானு
பலர்புகழும் பொன்னைய பாவலோனே.

உ

குகமயம்



# சங்கானை வெல்வில்.

# முருகையன் பராக்கிரமப் பதிகம்.

### காப்பு.

முத்திதரும் வெல்வில் முருகைய னுண்மகிழ்ந்து
சித்திதர யான்பதிகஞ் செப்பவே—சத்தியுட
னையான னன்சேர்ந்த ளித்துவந்த மும்மதமாக்
கையான னன்கழலே காப்பு.

### வழிபடு தெய்வ வணக்கம்.

விண்ணேறு மிந்ராதி தேவர் போற்றும்
விளங்கி லுப்பைத் தாள்வெல்விற் பதியின்மேவும்
தண்ணேறு புகழ்சிந்தா மணியே செல்வந்
தருஞ்சூளா மணியேசண் முகனே யையா
டண்ணேறு செந்தமி ழாலுனைக் குவந்த
பத்திநல நிறைபதிகம் பாடவே யென்
கண்ணேற நால்வகைச்சொல் பொருளுந் தந்து
கற்றவர்கள் வியக்கவுங்காத் தருள்செய் வாயே.

## நூல்.

### ஆசிரிய விருத்தம்.

செம்பொற் கழற்றண்டை பரிபுரத் தோடொலி
சிலம்பணி திருப்பாதமும்
செய்யபூம் பட்டொடரை ஞாணொலி கறங்குமணி
திகழிடையு மணிமதாணி

வம்பவிழ் கடம்பமலர் மாலைமுப் புரிநூன்
வயங்குமொளி திகழ்மார்பமும்
வாய்ந்தவடி வேலாதி பலபடைக ளோடபய
வரதநிறை கரவரிசையும்
நம்பிவரு மடியார்க ளுன்புநீத் தின்பமுற
நல்லுரை வழங்குவாயும்
நற்கருணை கூர்நயன மீராறு மொளிர்பொட்டு
நகுபட்ட மணிநெற்றியும்
விம்முமொழி வீசுமணி முடியுமென் கண்முன்
விளங்கவந் தருடருகுவாய்
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. 1

நாளைக்கு நாளைக்கென் றேவீணி லேயெனது
நாள்பல கழிந்ததந்தோ
நமனுரு மெட்டநின் றேபார்க் கிருர்மூப்பு
நரைதிரை யுதிர்ந்த பற்கள்
பழாக வுடலநோய் கொண்டு மெலிவுற்றிலம்
பாட்டினுற் பாடுபட்டுப்
பரதவிப் பேன்மீ திரங்காது பின்னுமொரு
படுபாடு காட்டிவைத்தாய்
ஏழையென் செய்குவே னிக்கொடிய பாடுபட
எந்தையே மிடியாதையா
இறைவனே யுன்கண்கள் கண்டதில்லையோ கருணை
யென்பதுன் னிடமில்லையோ
வேளைவென் ருேன்றந்த மைந்தனே கந்தனே
வினைகடீர்த் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே.

அண்டரண் டத்தொடகி லாண்டங் களபடைத்
தசரசர பேதமான
அளவிலாச் சென்மங்கள் வகைவகை படைத்தவைக்
காவன வளித்தழிக்குங்
கண்கண்ட கருணாகரக்கடவுள் நீயலது
கடவுள்வே றொருவருண்டோ
கந்தனே ஐந்துமுக னருளருமை மைந்தனே
கணபதிக் கொருதுணைவனே
மண்டலந் தன்னிற் பிறந்தவரு ளென்போல்
வருந்திமதி கெட்டவர்களார்
வள்ளலே யான்படும் பாடெல்லாங் கண்டினும்
மனதிரங் காததென்னோ
விண்டலங் காத்தவுன் கருணைக் கடாதெனது
வினைகடீர்த் தருளவேண்டும்
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [3]

தெண்கடலி லிருள்கடிந் தெழுபருதி யெனமையல்
செறிபாச விருடுரந்து
திகழ்ஞான வொளிவீசு வதனமும் வேள்விமுறை
செய்யுமொரு திருவதனமும்
பண்டுள்ள மெவ்வினையை மாற்றியுல வாப்பெரும்
பரவாழ்வு தருவதனமும்
பகரரிய பழமறைக ளிருடிக டெளிந்திடப்
பகர்வதன முங்கொடியசூர்த்
திண்பகை முடிக்குமுக முந்தெய்வ வள்ளியை
திருமண முடிக்குமுகமும்
செப்பரிய அற்புதத் திருமுகமொ ராறுடைய
தேவருன் போலுமுளரோ
விண்ணிலுயர் தெய்வநீ யென்று நம்பியவெனை

விடாதுகாத் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [4

ஆறுதொழி லைக்கொண்டவறுமுகங்கொண்டவைக்
கமையவா ரமுதமமரர்க்
கார்வமொ டளித்தகர ரமுமரிய சூர்மகளிர்
அன்புற வணைந்தகரமும்
மாறில்நன் மாரிபொழி கரமும் மலர்த்தொடையல்
மகிழ்வுற வணிந்த கரமும்
மார்பத்தில் வைத்தகர தலமுநன் வாமத்தில்
வைத்தகர முங்குறங்கில்
ஏறிமிளிர் கரமுமுயர் துடிபிடிக்குங் கரமும்
மியல்மணி சுறக்குகரமும்
ஏற்றமிகு மங்குசங் கேடகம் வாளிவைக
ளேற்றகைக் கடவுணீயே
வேறிங்கி யாருமிலை யென்றுன்னை நம்புமென்
வினைதவிர்த் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [5

விஞ்சுசூர்க் கடலைக் குடித்தவேல் சூரனொடு
வெற்பைப் பிளந்தவடிவேல்
வெந்திறற் சூர்ப்பது மனென்னு மிரு பெயருடை—
மிக்கவொரு பெரியவடிவை
வெஞ்சமரி லிருகூறு செய்துமயில் சேவலாய்
வேறுசெய் திடுவீரவேல்
விண்ணவ ரருஞ்சிறையை மீட்டவேல் வெற்றிவேல்
மினிர்தாரை வேல்செய்யவேல்
துஞ்சுதலி லாணவக் கட்டறுத் துயிர்களை

துய்யவா னந்தவீட்டிற்
சுகமுற விடுக்குமுயர் தெய்வவேல் கைக்கொண்ட
சுத்தநித் தியகர்த்தனே
விஞ்ஞாத மானவுயர் மெய்யனே யென்கொடிய
வினைகளைத் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [6

விண்டபக் குவமான பங்கயமிரா றுமுகை
விட்டன்ன அழகுவாய்ந்த
விள்ளரிய கருணைமழை பொழிவிழியு மளவில்சுடர்
விரவியொளி விட்டதன்ன
குண்டலமி லங்குசெவி யீராறு மடியர்குறை
கூறிடக்கண் டுகேட்டு
குறைதவிர்த் தின்புறக் கேட்டவை கொடுத்திடக்
கொண்டநற் கொடைவள்ளலே
எண்டகு மறங்களு மெட்டையும் வளர்த்தாய்
இன்போடு பெற்றமகனே
எனையீன்ற வன்னையே யென்னரிய தந்தையே
யேழையே னுக்குனைப்போல்
விண்டுசொல வொருகடவுள்வே றுமுண்டோவெனை
விடாதுகாத் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [7

உற்றவல் வாயினிற் சேடனெனு மரவைவைத்
துபயசர ணங்களின்கீழ்
ஓங்குபிர கிருதியெனு முரகத்தை வைத்தழகி
லுயர்புள்ளி பொலிதோகையின்
கற்றையாற் கடலேழுடன் பகுதி கிரியுங்
கடந்துறுந் திகிரிகிரியும்

காணரிய வண்டகோ ளகையட்ட திக்குங்
கடந்துபோய் வட்டமிட்டு
சுற்றித் திரிந்துலவு கொற்றமா மஞ்ஞையைத்
துய்யபரி யாகமேவுந்
தூங்கதிற லுடையுறு முதற்கடவு ணீயலது
சொல்லவொரு தெய்வமுளதோ
வெற்றுடலை வீணிற் சுமந்துழலுமே ழையேன்
வினைகடீர்த் தருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [8]

கடல்கிழிந் துடையப் புறத்தண்ட கோளகை
கழன்றுதுக ளாகியுதிரக்
காணுமுடு படலத்தி டைப்பட்ட குன்றமுங்
கனகமா மலையுமிடியப்
புடைபட்ட சிகரரை யடித்தார்ப் பரிக்குமொரு
போர்செய் முட்டாட்சேவலைப்
புகலரிய வெற்றிப்ப தாகையென மேற்போய்ப்
பொருந்தத் தனித்துயர்த்த
திடமுற்ற மெய்ப்போத வின்பவடி வாயுள்ள
தெய்வம்நீ யன்றிவேறு
செப்பவொரு தெய்வமுண் டோவிண்டு முதலான
தேவர்கள் பிழைக்கமுன்னாள்
விடமூண்டு காத்தசிவ னுக்கரிய மைந்தனே
வினைதவிர்த் தருள்கந்தனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [9]

ஆராயி ரண்டசர வசரமாகி யவளவி
லான்மகோ டிகளையீன்ற
அன்னை யோடப்பனீ ஆதரித்தா ண்டருள்செய்

யரியவொரு கடவுள்நீயே
பேராதரிக் குமடியார் பிறவிநீத் தரிய
பேரின்பவீட் டில்வைக்கும்
பேசவுலா வாப்பெருஞ் செல்வமேயுலகிற்
பிறந்தநாட் டொட்டிதுவரை
தீராத வறுமைதுயர் நோயால் வருந்தித்
திகைத்துமதி கெட்டலைந்தேன்
திக்குவிச யஞ்செய்து தேவரைச் சிறைகொண்ட
தீரசூர னைவதைத்த
வீராதிவீரனே துணையற்ற வென்றனை
விரும்பியாண் டருளையனே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [10

சச்சிதா னந்தமயமான வொருகடவுளுயர்
சங்கரன் றந்தகடவுள்
சரவணத் தறுபால ராயாடல் புரிகடவுள்
தாயணைத் திடவொரிருதாள்
மெச்சுமுக மாறான கடவுளய னைச்சிறையி
லிட்டவுயர் கடவுடாதை
வினவமெய்ப் பொருளை யுபதேசித்த கடவுடிறல்
மிக்கவரை தாரகனையும்
அச்சமிலு ளத்தவுண குழுவோடு சூரையு
மழித்துவான் காத்தகடவுள்
ஆறுசம யக்கடவு ளாங்கலியுகக் கடவுள்
அண்டரெல்லா முச்சிமேல்
விச்சையொடு வைத்தடி தொழுங்கடவு ணீயெனது
வினைகடீர்த் தருள்கடவுளே
வெற்றிவேற் கையனே விண்ணவர் சகாயனே
வெல்விலுறை முருகையனே. [11

# பிழை பொறுத்தருள வேண்டல்

அண்டர் தொழும் வெல்வில் முருகையா மெய்யா
வப்பனே யாருயிரே ஐயாவுன்னை
வண்டமிழால் வைதவற்கும் நல்லவாழ்வு
மகிழ்ந்தருளுங் கருணைவள்ள லென்றேகூற
கண்டவறி விலியெனக்கும் நல்லவாழ்வு
கவலையுநீத் தருட்டருவாயென் னுமாசை
கொண்டுபுன் சொலாற் பதிகஞ் சொன்னேனுற்ற
குறைதவிர் தேற்றுவந்தருடந் தாட்கொள்வா
[யே

# வாழி

ஆறுமாமுகம் வாழ்க வயில்வேல் வாழ்க
ஆறிரண்டுகரம் வாழ்க அடலான்மிக்க
ஏறுமயில் குக்குடமும் வாழ்கத் தெய்வ
யானையொடு வள்ளிநாயகியும் வழ்க
ஈறில்சைவம் நீறுகண் டிகையும் வாழ்க
எழிற்றம்ப நகர் செல்வம் கல்வி ஞானம்
மீறிமன்னி வாழ்க விந்தப் பதிகந்தன்னை
மிக்கவன்பினோடு படித்தோர்கேட்டோர்வாழ்க.

சுபம்.

வேலும் மயிலும் துணை.

உ

குகமயம்

# சங்கானை வெல்வில்

# முருகையன் திருஊஞ்சல்

## காப்பு

விந்தைசெறி பொன்னுலகு குடிபுகுத்தி
விண்டுமுத லாமமரர் துயரந்தீர்த்து
விந்துதம்ப நகரிருப்பைத் தாளிற்றோன்றி
வளநிறை வெல்விற்டதியிற் கோயில்கொண்ட
கந்தமுரு கையன்மே லூஞ்சல்பாடக்
கருதரிய பொருட்சுவை சொற்சுவையுந்தந்து
கந்தமத கும்பதும்பி முகத்துத்துங்க
கணபதித னிருசரணங் காப்பதாமே.

## நூல்

காராரும் முத்துமண் டபத்தின் நன்மேற்
கட்டிமலர் மணிமாலை வயங்கநாற்றி
சீராரு நற்பவளக் கால்கணூட்டி
திகழொளிகால் முழுவயிர விட்டம்பூட்டி
நீராரு முயர்முத்து வடங்கண்மாட்டி
நிறைவில்விடு மருணரத்நப் பலகைபுக்கு
ஏராருந் தம்பநகர் வெல்விம்மேய
எந்தைமுரு கையனே யாடீரூஞ்சல். (1

கற்பகநன் னிழலியெயி ராணிபோற்றுங்
கற்பரசி தெய்வகுஞ் சரியும் வேடர்
நற்றவத்தாற் பெற்றவுயர் தெய்வவள்ளி
நாயகியு மிருபுறத்தும் நயந்துவைக
ஏற்பொலியு முழுமணிப்பொன் ஊஞ்சன்மேவி
எவ்வுயிருங் கருணைவெள்ளத் தினிதுமூழ்க
அற்பொலிசாச் சூழ்தம்ப நகரின்வெல்வின்
அமர்ந்தமுரு கையனே யாடீரூஞ்சல். (2

பணையுடுக்கை பேரிமொந்தை படசமாதிப்
பறைபொலிசாரொலியெனப் பார்துளங்கியேங்க
விணையில்வளை கோடுவேய்ங் குழலெக்காளம்
இலயத்தசின்ன மாதிவாத் தியைம்பக்

வணைவிலுயர் பேரியாழ் முதலநான்கும்
அமிர்தமெனச் செவிக்கினிமை யூட்டச்செந்நெற்
பணைவளையுந் தம்பநகர் வெல்வின்மேய
பரமமுரு கையனே யாடீரூஞ்சல். (3

இந்திரையு மிந்திராணி தாமுமிந்த
வியைந்ததிரு வூஞ்சல்விழாச் சிறப்புக்கண்டே
யந்தவிழி யும்மனமுங் களிப்புமிக்கா
னந்தவா ரிதிபடிந்தே அவசமாக
வந்தநவ சக்திகளும் வடந்தொட்டாட்ட
வரிவிழிமா தெழுவருள மகிழ்கொண்டாட
சுந்தரமார் தம்பநகர் வெல்வின்மேய
துய்யமுரு கையனே யாடீரூஞ்சல். (4

வண்டினந்தஞ் சுரும்பொடல மரயாழ்பற்றி
மருங்கிலுற வணைத்துமா டகமுறுக்கி
வெண்கலச நங்கையிசை யூட்டநல்ல
வித்தியா தரமகளிர் கீதம்பாட
விண்டலமே னகைமுதலாம் மாதராட
மேதகைய வரமகளிர் மகிழ்கொண்டாட
வண்டார்தொழும் தம்பநகர் வெல்வின்மேய
ஐயமுரு கையனே யாடீரூஞ்சல். (5

வரபருவு சூர்மகளிர் வயங்குமட்ட
மங்கலங்க ளேந்திவர மடவார்பஞ்சி
விரவுகருப் புரநாவி நெய்நிறைத்து
விஞ்சதீச் சுடர்நிறைபொற் றட்டங்காட்ட
உரசவரை முதலாய மகளிரெல்லாம்
ஒளிகொள் சுடர்த் தீபமெடுத் தொருபாற்சூழ
அருள்நிறையுந் தம்பநகர் வெல்வின்மேய
ஐயமுரு கையனே யாடீரூஞ்சல். (6

இதுதருண மருள்பெறவென் றயன்மாலாதி
யிமையவரெ லாமவிரைந்து வந்தேஎங்கள்
பதமினிது நிலைபெறநல் கருள்செய்வாயெம்
பரமகா ருண்யமுரு கையாவென்றே
துதிகள்செய்து தம்பணியி லொழுகநல்ல
தூயவுளத் தெய்வமுனி தொழுதுபோற்றக்
கருதருநற் றம்பநகர் வெல்வின்மேய
கந்தமுரு கையனே யாடீரூஞ்சல். (7

கொற்றவெண் குடைபருதி பிடிப்பமேலாங்
கொடிநிசா பதியன்பி னோடுதூக்க
கற்றைவெண் கவரிகா லசைப்பச்செம்பொற்
காம்புநீ டாலவட்டம் வருணன்றாங்க
ஒற்றைவாட் படைமறலி கைப்பிடிப்ப
உருத்திரரா தியர்போற்றவுயர்நெற் பண்ணை
சுற்றுதம்ப நகர்வெல்விற் பதியின்மேய
துங்கமுரு கையனே யாடிரூஞ்சல். (8

பாராடா நீராடத் தேயுவாடப்
பவனனொடு வானாடப் பருதியாட
நீராருந் தவளமதி யாடமேலாய்
நிறைதேவ ரெலாமாட நறியநீபத்
தாராட மாயயந்ரக் கயிறுமாட்டிச்
சகலசரா சரங்களையு மாட்டியாட்டுஞ்
சீராரத் திருத்தம்ப நகரின் வெல்வில்
செல்வமுரு கையனே யாடிரூஞ்சல். (9

ஆறுமுகங் கொண்டயனைச் சிறையில் வைத்து
அகிலமெலாம் படைத்தரற்கா சிரியராகி
மாறுபடு கிரியொடு தாரகனைவீட்டி
வல்லசூர்ப் பிளந்தமரர் மறியல்நீக்கி
ஈறில்விண் குடியேற்றி யேழையேமீ
டேறவரு டரவிருப்பைத் தாளிற்றேன்றி
மாறில்வள நிறைதம்ப நகரின் வெல்வில்
வைகுமுரு கையனே யாடிரூஞ்சல். (10

ஆறுதிரு முகம்வாழ்க அழகாரீரா
றடற்றடந் தோள்வாழ்க வயில்வேலும்வாழ்க
ஏறுமயில் குக்குடமும் வாழ்கநல்ல
எயினர்குல மாதுதெய்வ யானைவாழ்க
ஈறில்சைவம் நீறுகண் டிகையும்வாழ்க
இணையில் கல்வி ஞானமுயர் செல்வமோங்கி
மாறில்வளந் தரத்தம்ப நகரின் வெல்வில்
வைகுமுரு கையனே யாடிரூஞ்சல். (11

முற்றிற்று;

வேலும் மயிலும் துணை!

## பராக்கு

சீராரு மாறுமுகத் தேவ பராக்கு
திருவளர் செவ்வேற கரத்துச் செல்வா பராக்கு
காராரு மோதிவள்ளி கணவா பராக்கு
காலகண் டன்றந்தமைந்தா கந்தா பராக்கு
பாராரீடேறவந்த பரனே பராக்கு
பார்ப் பதித்தாய் தந்ததிருப்பாலா பராக்கு
ஏராரும் வெல்விலுறைஇறைவா பராக்கு
எங்கள் வினை தீர்த்தருளீசுரனே பராக்கு

## எச்சரிக்கை

அருளார் வெல்விற் பதிவாழ்முருகையா எச்சரிக்கை
அரனார் திருநுதலால் வருமமலா எச்சரிக்கை
மருளா மனத்தெய்வானை தன்வரனே எச்சரிக்கை
வானோர்துயர் தனைத்தீர்த்தருள் வரதா எச்சரிக்கை
வருமாருயிர் தமைச்காக்கும் மான்மருகா எச்சரிக்கை
வடிவார்மயின் மிசைமே வாவள்ளால் எச்சரிக்கை
பொருளார்திருமறைசேர்தருபுலவா எச்சரிக்கை
போதாபனு தீதாவுயர் புனிதா எச்சரிக்கை

## மங்களம்

மங்களம் ஜெயமங்கம் ஒரு
மாவையிரு கூறாகண்டவீரவடிவேலவற்கு —மங்
தும்பிமுகன் தம்பியற்குத்துய்ய மயில்வாகனற்கு .. மங்
அம்பிகைதன் மைந்தருக்கு ஆறிரண்டு கையருக்கு .. மங்
சச்சிதான ந்தருக்குச்சர்வபரி பூரணற்கு
முச்சகம் படைத்தவர்க்குமுப்பூர்த்தி யானவற்கு .. மங்
ஆதிசிவபாலகர்க்குஅரணத்தின் காரணற்கு
சோதிவடிவானவற்குதுங்கருணாகரற்கு ... மங்
செய்யவள்ளிகாதலர்க்குதெய்வானை நாயகற்கு
வெய்யவினை தீர்ப்பவர்க்குவெல்வில்முருகையனுக்கு .. மங்

முற்றும்

வேலும் மயிலும் துணை.